## உஷாரய்யா உஷாரு...

அந்த பஸ் நகரத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து மாணவ-மாணவிகளை ஏற்றிக் கொண்டு கல்லூரிக்கு புறப்படும். புற நகரைக்கடந்து சில கிராமங்களை தொட்டு இன்னொரு நகரத்தில் உள்ள பிரபல கல்லூரியை சென்றடையும். ஒரு சில வருடங்களாக அதில் தொடர்ந்து பயணம் செய்து கொண்டிருந்த இருவருக்குள் காதல் உருவானது.

'செல்போன் கொண்டு போகக் கூடாது, நெருக்கமாக அமர்ந்து பேசக்கூடாது'- என்றெல்லாம் பல நிபந்தனைகள் இருந்ததால், காதலை எப்படி வளர்ப்பது என்று அவர்களுக்கு தெரியவில்லை. காலையில் பஸ் வழக்கத்தை விட சீக்கிரமாகவே கல்லூரியை சென்றடையும் நிலை ஏற்பட்டால், இடைவெளியில் இருக்கும் கிராமத்து டீக்கடையில் 10 நிமிடங்கள் டிரைவர் பஸ்ஸை நிறுத்திவிட்டு டீ சாப்பிடுவார். அப்போது நகரத்து



மாணவ-மாணவிகளில் பெரும்பாலானவர்கள் 'ரிலாக்ஸ்' ஆக கீழே இறங்கி சிறிது நேரம் நிற்பார்கள். அந்த பகுதியில் இருபுறமும் மரங்கள் அடர்ந்து வளர்ந்து நிற்கும். ஆங்காங்கே ஒன்றிரண்டு வீடுகளும் தென்படும்.

அந்த இடத்தை பயன்படுத்திக் கொள்ள அந்த காதல் ஜோடி முடிவு செய்தது. எல்லோரும் இறங்கும் போது அவர்களும் இறங்குவார்கள். அப்படியே நைசாக நழுவி, மரம் அடர்ந்த பகுதியில் மறைந்து கொள்வார்கள். பஸ் கிளம்பி கல்லூரிக்கு போய் விடும். ஒன்றிரண்டு மாணவ-மாணவிகளுக்கு இந்த 'விஷயம்' தெரிந்தாலும் 'எக்கேடும் கெட்டுப்போகட்டும்' என்று விட்டு விட்டார்கள்.

அந்த மரங்கள் அடர்ந்த தோப்பின் அருகில் ஒரு வீட்டில் 50 வயதை தொடும் அந்த குண்டு பெண் வசித்து வருகிறாள். மர மறைவில் உட்கார்ந்து பேசிய ஜோடியை அணுகி, 'இதில் என்ன த்ரில் இருக்கு, வாங்க... என் வீட்டில் வேறு யாரும் இல்லை. நான் மட்டும் தான் இருக்கேன். தனியா ஒரு அறையும் இருக்கு. நீங்க அங்கே உட்கார்ந்து பேசுங்க' என்று அழைத்தாள். அந்த பெண்ணின் சினேக சிரிப்பை நம்பி, பாதுகாப்பு நலன் கருதி அந்த காதல் ஜோடி அந்த வீட்டிற்கு செல்லத் தொடங்கியது.

மாதத்தில் ஒன்றிரண்டு நாட்கள் அந்த வீட்டை காதல் ஜோடி பயன்படுத்தினர். அவ்வப்போது அந்த குண்டு பெண்ணுக்கு 100, 200 ரூபாய் பணம் கொடுத்தனர்.

அன்று காதலன் முகம் இருண்டு போயிருந்தது. கையில் ஒரு கவரை வைத்து இருந்தான். அதை ரகசியமாக பிரித்து, பஸ்ஸில் இருந்து இறங்கிய காதலியிடம் காட்டினான். அவள் பார்த்து பயத்தில் அழத்தொடங்கி விட்டாள்.

"அந்த குண்டுப்பெண், அவளது வீட்டில் நாம் இருவரும் நெருக்கமாக இருந்ததை எல்லாம் படம் பிடித்திருக்கிறாள். இதைக்காட்டி பணம் பறிக்கிறாள். கொடுக்காவிட்டால் நம் இருவருக்குமே அவமானம்" என்ற அவன் தனது கையில் இருந்த தங்க சங்கிலி ஒன்றை எடுத்து அவளிடம் காட்டினான். 'பணத்திற்கு வேறு வழியில்லை என்பதால், அக்காவின் தங்கச்சங்கிலியை திருடிவிட்டு வந்திருக்கிறேன். நீயும் உன் பங்கிற்கு இப்படி ஏதாவது வீட்டில் இருந்து எடுத்துக்கொண்டு வா. அவளிடம் கொடுத்து மொத்த படங்களையும் வாங்கி விட்டு தலை முழுகி விடலாம்' என்றான்.

அவளுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. சொந்த வீட்டிலே திருடுவதை தவிர வேறு வழியும் இல்லை.

திருடினாள். தங்கசங்கிலியை அவனிடம் கொடுத்து, 'எப்படியாவது இந்த அவமானத்தில் இருந்து என்னை காப்பாற்று' என்றாள். அவன் சரி என்று கூறி, அன்று பஸ்ஸில் இருந்து இறங்கி தனியாக அந்த குண்டுப்பெண் வீட்டை நோக்கி போனான்.

மறுநாள் கொத்தாக காதலியிடம் படங்களை கொடுத்து 'நமக்கு இனி பயமில்லை' என்றான்.

இப்படித்தான் வருடத்திற்கு ஒன்றிரண்டு வசதி படைத்த மாணவிகளை அவனும், அந்த குண்டுப் பெண்ணும் சேர்ந்து திட்டமிட்டு 'படம்' எடுத்து ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

நீங்கள் கல்லூரி மாணவியாகவோ, இளம் பெண்ணாகவோ இருந்தால் இப்படிப்பட்ட 'காதல் டா' மோசடியில் சிக்கிடாதீங்க?

-உஷாரு வரும்.

# குழந்தைகளை காப்பாற்ற 'பாலியல் விழிப்புணர்வு'



நாளைய தினம் (நவம்பர் 19) உலக அளவில் மிக முக்கிய தினமாகும். உலகின் வளர்ச்சிக்கு முக்கியமான கண்டுபிடிப்பு நிகழ்ந்த நாளா? என்று நீங்கள் கேட்க வேண்டாம். நாளைய இளைய சமுதாயம் நலமாக வளர்ச்சி காண விழிப்புணர்வு ஊட்டும் தினம். நாளை உலக குழந்தைகள் பாலியல் கொடுமைக்கு எதிரான விழிப்புணர்வு நாள்.

> பெற்றோர் தன் உறவினர், நண்பர்கள் அறிமுகமானவர்களைக் காட்டிலும், அந்நியர்களைப் பற்றியே அதிகம் கவலைப்படுகின்றனர். ஆனால் நெருக்கமானவர்களால் கூட குழந்தைகளுக்கு பாலியல் தொந்தரவு நிகழலாம்...

குழந்தைகளுக்கு எதிரான பாலியல் கொடுமைகள் மறைமுகமாக அரங்கேறுவது அதிர்ச்சிகரமானது. சமூகத்தில் அதுபற்றிய விழிப்புணர்வு இல்லாமல் இருப்பது துக்ககரமானது. 'நான்கு பேரில் ஒரு சிறுமியும், ஆறு பேரில் ஒரு சிறுவனும் பாலியல் கொடுமைக்கு உட்படுத்தப்படுகிறார்கள்' என்ற அதிர்ச்சியூட்டும் தகவலை சமீபத்திய புள்ளிவிவரம் தெரிவிக்கிறது.



அரியானா மாநிலத்தில் டிசம்பர் 2009-ல் 19 வருடங்கள் கழித்து ரிச்சிகா கிர்கோட்ஷா என்ற பெண்ணுக்கு நீதி கிடைத்தது. ஆனால் அப்போது அவள் உயிரோடு இல்லை. ரிச்சிகா 14 வயதில் டென்னிஸ் பயிற்சி மாணவியாக இருந்தபோது, முன்னாள் காவல் துறை அதிகாரி ரத்தோரால் பாலியல் கொடுமைக்கு ஆளானார். அவரது குடும்பத்திற்கு ரத்தோர் தொடர்ந்து ஏற்படுத்திய மன உளைச்சலால் 3 வருடம் கழித்து ரிச்சிகா தற்கொலை செய்து கொண்டார்.

இதுபோன்ற கொடுமைகளில் இருந்து உங்கள் குழந்தைகளை காக்கவும், இதற்கு எதிராக விழிப்புணர்வு ஏற்படுத்தவும், நவம்பர் 19-ந்தேதி குழந்தைகளுக்கு எதிரான பாலியல் கொடுமைகளை தடுக்கும் உலக நாளாக அனுசரிக்கப்படுகிறது.

பாலியல் கொடுமைகளைத் தடுக்க நாம் அறிந்து கொள்ள வேண்டிய விஷயங்களும், குழந்தைகளுக்கு கற்றுக் கொடுக்க வேண்டிய விஷயங்களும் ஏராளம் உள்ளன.

**நாம் அறிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள்:**

★ பாலியல் குற்றங்களில் ஈடுபடுபவர்கள், குற்றவாளி போன்ற நடவடிக்கைகள் இல்லாமல் அனைவரும் விரும்பும்படியாகவும், மற்றவரை கவரும் தன்மை உள்ளவராகவும், சிறப்பான செயல்திறன் படைத்தவராகவும் இருக்கிறார்கள்.

★ குழந்தையின் எதிர்ப்பை குறைப்பதற்காக, அந்தக் குழந்தையை ஆயத்தப்படுத்தும், சில யுத்திகளை அவர்கள் கையாளுவர். உதாரணமாக சாக்லெட், பொம்மைகள் வாங்கிக் கொடுக்கலாம். அவர்கள் குழந்தையை மட்டுமல்ல, குழந்தைக்கு நெருக்கமானவர்களையும் கவர்ந்துவிட முயற்சிப்பார்கள்.

★ சுய பாதுகாப்பு முறைகளை குழந்தைகளுக்கு சொல்லிக் கொடுத்தாலும், குழந்தையால் மட்டுமே தன்னை பாதுகாத்துக் கொள்ள முடியாது என்பதை உணர்ந்து பெற்றோர் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

★ பெற்றோர் தன் உறவினர், நண்பர்கள் அறிமுகமானவர்களைக் காட்டிலும், அந்நியர்களைப் பற்றியே அதிகம் கவலைப்படுகின்றனர். ஆனால் நெருக்கமானவர்களால் கூட குழந்தைகளுக்கு பாலியல் தொந்தரவு நிகழலாம்.

★ வழக்கமாக குடும்பம், குழந்தைகள் இல்லம், விடுதி, பயிற்சி மையம் போன்ற இடங்களில்தான் அனேகமாக பாலியல் கொடுமைகள் அரங்கேறுகின்றன.

★ பாலியல் கொடுமை செய்தவர்கள் நன்கு அறிமுகமானவர்களாக இருக்கலாம். 10-ல், 8 குழந்தைகளுக்கு தன்னை பாலியல் கொடுமை செய்தவரை நன்கு தெரியும்.

★ குழந்தைகளின் மீது பாலியல் ஈர்ப்பு உள்ளவரும், ஓரின ஈர்ப்பு உள்ளவரும் ஒன்றல்ல. இரண்டிற்கும் தொடர்பு இல்லை.

★ பலாத்காரம் மட்டுமே பாலியல் கொடுமை அல்ல. குழந்தையின் தனிப்பட்ட உடல் உறுப்புகளை தொடுதல், மற்றவரின் தனிப்பட்ட உடல் உறுப்புகளை பார்க்கச் செய்தல், தொடச் செய்தல், குழந்தை குளிப்பதை, ஆடை மாற்றுவதை மறைந்திருந்து பார்ப்பது, செல்போன், கேமராவில் நிர்வாண நிலையில் குழந்தையை படமெடுத்தல், இவையும் பாலியல் கொடுமையே.

★ இந்தியாவில் பாலியல் வன்முறைகளிலிருந்து பாதுகாக்கும் சட்டம் 2012-ல் இயற்றப்பட்டு நடைமுறைப் படுத்த தயாராகிக் கொண்டிருக்கிறது. இதன் மூலம் பாலியல் கொடுமைக்கு எதிராக பள்ளியில் பயிற்சி அளிக்கப்படுவதோடு, குற்றவாளிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

குழந்தைகளுக்கு கற்றுக் கொடுக்க வேண்டியவை மற்றும் பாலியல் வன்முறைக்கு எதிராக செயல்படும் முறைகள்:

★ உங்கள் குழந்தையோடு தனிமையில் ஒருவர் அதிக நேரம் செலவிடும் தருணங்களை தவிர்ப்பது. குழந்தையின் மீது யாராவது அதிக விருப்பம் காட்டினால் உஷாராக இருப்பது.

★ பாலியல் கொடுமை பற்றி குடும்பத்தினரிடமும், மற்றவரிடமும் பேச குழந்தைகள் தங்களை தயார் செய்து கொள்ள வேண்டும்.

★ பாலியல் கொடுமை நடந்தால் அதைரகசியமாக வைத்துக் கொள்ளக் கூடாது என பெற்றோர் குழந்தைக்கு கற்றுக் கொடுக்க வேண்டும். ஏனென்றால் அதில் குழந்தையின் தவறு ஒன்றும் இல்லை. பாலியல் குற்றம் புரிபவரின் வலிமையான ஆயுதமே, குழந்தைகளின் பயம், தயக்கம் ஆகியவைதான். எனவே ரகசியம் உடைப்பதே குற்றத்தை தடுக்கும்.

★ குழந்தையின் அந்தரங்க உடல் உறுப்புகள் பற்றியும், பிரச்சினைக்குரிய தொடுதல், பிரச்சினைகளற்ற தொடுதல் பற்றியும் கற்றுக் கொடுக்க வேண்டும்.

★ விருப்பமில்லாதவர்களோடு குழந்தைகள் இருக்க வேண்டியதில்லை என்று அவர்களுக்கு கற்றுக்கொடுங்கள்.

★ குழந்தைகளிடம் கடினமாக பெற்றோர் நடந்து கொள்ளக்கூடாது. அன்பும், பாராட்டும் கிடைக்காத குழந்தையை பாலியல் குற்றம் புரிபவர் தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்வர்.

★ பள்ளிகளில் சிறு வயது முதலே குழந்தைகளுக்கு பாலியல் கொடுமையை தடுக்கும் சுய பாதுகாப்பு செய்திகளை வழங்கலாம்.

பாலியல் கொடுமைக்கு எதிராக விழிப்புணர்வுடன் இருப்பது ஒவ்வொரு பெற்றோரின் கடமை. குழந்தைகளை பாலியல் வன்முறைக்கு எதிராக விழிப்படைய வைப்பதும் பெற்றோரின் கடமை.

**தகவல்: துளிர், குழந்தை பாலியல் கொடுமை தடுப்பு மற்றும் குணமளிக்கும் மையம், சென்னை.**

# திகைக்கவைக்கும் 'தேசப் பொக்கிஷம்'

இப்போது நினைத்தாலும் இந்தியர்களை உணர்ச்சிப்பிழம்பாய் மாற்றிவிடும் சம்பவம் அது. நடந்தது: 1893 ஜூன் மாதம்!

அன்று தென்னாப்பிரிக்காவின் ஜோகனாஸ்பர்க்கில் இருந்து கிளம்பிய ரெயிலில் முதல் வகுப்பு பெட்டியில் காந்திஜி பயணம் செய்துகொண்டிருந்தார். பீட்டர்மெரிட்ஸ்பர்க் என்ற நிலையத்தில் ரெயில் நின்றதும், வெள்ளையர்கள் சிலர் ஏறினார்கள். அவர்கள் முதல் வகுப்பு பெட்டியில் இருந்த காந்திஜியைப் பார்த்ததும் ஆத்திரம் அடைந்தனர். 'கறுப்பருக்கு இந்த பெட்டியில் இடமில்லை' என்று, காட்டுக்கூச்சல் போட்டார்கள். காந்திஜி அமைதியாக இருந்தார்.

கூச்சல் கேட்டு, டிக்கெட் பரிசோதகர் வந்தார். அவரிடம் காந்திஜியை சுட்டிக்காட்டி அவரை கீழே இறக்கிவிடுமாறு சொன்னார்கள். காந்திஜியோ, 'நான் முதல் வகுப்பில் பயணம் செய்ய டிக்கெட் வைத்திருக்கிறேன். அதனால் பயணம் செய்வேன். இறங்க மாட்டேன்' என்றார்.



பீட்டர்மெரிட்ஸ்பர்க் ரெயில் நிலையம்



காந்திஜியை கீழே தள்ளிவிட்ட இடத்தில் தென்னாப்பிரிக்க அரசு அமைத்துள்ள நினைவிடம்.

உடனே டிக்கெட் பரிசோதகர், 'அவர்கள் (வெள்ளையர்கள்) உங்கள் அருகில் இருந்து பயணம் செய்யவிரும்பவில்லை. அதனால் நீங்கள் இரண்டாம் வகுப்பு பெட்டிக்கு சென்று விடுங்கள்' என்று கூறிக்கொண்டிருந்தபோதே, அந்த வெள்ளையர்கள் காந்திஜியை பிடித்து வெளியே தள்ளிவிட்டார்கள்.

பிளாட்பாரத்தில் காந்திஜி விழுந்தார். அப்போதே அவர், தென்னாப்பிரிக்காவில் உள்ள இந்தியர்கள் மனதில் இடம் பிடித்து எழுந்தார். அந்த சம்பவம் காந்திஜியின் மனதிலும் மிகப்



தென்னாப்பிரிக்க அரசு வெளியிட்ட ஸ்டாம்புகள்.

பெரிய உத்வேகத்தை ஏற்படுத்தியது. அந்த உத்வேகம்தான் அவரை போராடத்தூண்டி, அவரை அகிம்சையின் உலக நாயகன் ஆக்கியது.

காலங்கள் உருண்டோடின. காந்திஜியை, வெள்ளையர்கள் கீழே தள்ளிவிட்ட அதே இடத்தில் தென்னாப்பிரிக்க அரசு நினைவிடத்தை அமைத்துள்ளது. அந்த நினைவிடத்துடன் கூடிய ஸ்டாம்ப்பையும், சிறப்பு அஞ்சல் அட்டையையும் வெளியிட்டு காந்திஜியை கவுரவித்தது.

காந்திஜிக்கு இதுவரை இந்தியா 45-க்கும் அதிகமான வகை ஸ்டாம்புகளை வெளியிட்டு புகழ் அஞ்சலி செலுத்தியுள்ளது. அதோடு போட்டிபோடும் விதத்தில் செயின்ட் தாமஸ் பிரின்சஸ் தீவுகள் 16 அற்புதமான ஸ்டாம்புகளையும், சாட் என்ற பிரெஞ்சு நாடு 20 ஸ்டாம்புகளையும் வெளியிட்டு காந்திஜிக்கு கவுரவம் சேர்த்துள்ளது.

ஐக்கிய நாட்டு சபை காந்திஜி பிறந்த அக்டோபர் 2-ந்தேதியை, 'சர்வதேச அகிம்சை தினமாக' அறிவித்து அவரது புகழுக்கு மகுடம் சூட்டியது. இதற்கான அறிவிப்பை 2007 ஜூன் 15-ந்தேதி வெளியிட்டது.

காந்திஜியின் 140-வது பிறந்த தினமான அக்டோபர்-2009ல், அவரது ஸ்டாம்ப்பையும் வெளியிட்டு பெருமைப்படுத்தியது. அதில் இடம்பெற்ற காந்திஜியின் ஓவியத்தை உலகப்புகழ் பெற்ற ஓவியர் பெர்டிக் பெச்சிக்கோ வரைந்தார். அனைத்து வண்ணங்களையும் பயன்படுத்தி வரையப்பட்ட அபூர்வ ஓவியம் அதுவாகும்.

ஓவியர் பெர்டிக் பெச்சிக்கோ வரைந்த ஓவியத்தை கொண்டு ஐ.நா. சபையால் வெளியிடப்பட்ட காந்திஜி நினைவு ஸ்டாம்ப்.



## தங்க நாணயங்கள்

இரண்டாயிரம் ஆண்டுகளாக நாணயங்களில் உருவம் பொறிக்கப்பட்டுவருகிறது. பல நூற்றாண்டுகள் அந்த நாட்டில், அந்த நாணயங்கள் புழக்கத்தில் இருக்கும் என்பதால் அந்த நாட்டின் மன்னர், தலைவர்களின் உருவங்களே அதில் பொறிக்கப்படும். அந்த நடைமுறையை உலக அளவில் முறியடித்தவர் நமது காந்தி மகான். 15-க்கும் மேற்பட்ட நாடுகள் அவருக்கு தங்கம், வெள்ளி, வெண்கலம், நிக்கல், செம்பு, பித்தளை, அலுமினியம் போன்ற பல்வேறு உலோகங்களில் நாணயங்களை வெளியிட்டுள்ளன.

உலக நாடுகள் பொதுவாக மூன்று விதமான நாணயங்களை வெளியிடுகின்றன. அவை: சாதாரண புழக்கத்திற்கானவை, நினைவு நாணயங்கள், யு.என்.சி. எனப்படும் சேகரிப்பு நாணயங்கள்.

சாதாரண நாணயங்கள் கட்டுப்பாடுகள் எதுவும் இன்றி தேவைப்படும்போதெல்லாம் வெளியிடப்படும். நினைவு நாணயங்கள், குறிப்பிட்ட தலைவரை நினைவுபடுத்தும் விதத்தில் குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட எண்ணிக்கையில் வெளியிடப்படும். அதனால் இந்த நினைவு நாணயங்கள் குறிப்பிட்ட காலத்திற்கு பிறகு கிடைப்பதற்கு அரியதாகிவிடும். அதனால் அதன் மதிப்பு லட்சகணக்கான ரூபாயில் உயர்ந்து கொண்டே செல்லும். வெளிநாடுகளில் வெளியிடப்பட்ட மகாத்மா காந்தியின் நாணயங்கள், தற்போது விலை மதிப்பற்றதாக மாறி இருக்கிறது. யு.என்.சி எனப்படும் நாணயங்கள் சேகரிப்பாளர்களுக்காக மட்டும் குறைந்த அளவில் வெளியிடப்படுகிறது.

காந்திஜிக்கு முதன் முதலில் நாணயம் வெளியிட்ட வெளிநாடு, ஈக்வடோரியல் கினி. இது மத்திய ஆப்பிரிக்க நாடு. வெள்ளி மற்றும் நிக்கலில் காந்திஜியின் அழகான உருவத்தை பொறித்து வெளியிட்டார்கள். இது அந்த நாட்டில் சாதாரணமாக புழக்கத்தில் விடப்பட்டிருக்கிறது.



ஈக்வடோரியல் கினி நாட்டால் வெளியிடப்பட்ட காந்திஜி உருவம் பொறிக்கப்பட்ட நாணயம்.

அஜ்மன் என்ற அரபு நாடு 1970-ம் ஆண்டு காந்திஜியின் உருவம் பொறிக்கப்பட்ட 15 கிராம் எடைகொண்ட உலோக நாணயத்தை வெளியிட்டது. 1175 நாணயங்களை மட்டுமே வெளியிட்டது. இப்போது இந்த நாணயம் ஒன்றின் மதிப்பு ஒரு லட்சம் ரூபாயை தாண்டிவிட்டது.

சமோவா என்ற நாடு 2003-ல் இந்த தங்க நாணயத்தை காந்திஜியின் உருவத்தை பொறித்து வெளியிட்டது. ஒரு கிராமுக்கும் குறைவான எடை கொண்ட இந்த நாணயத்தில் இரண்டாயிரம் மட்டுமே அப்போது வெளியிடப்பட்டது. இதுவும் கிடைப்பதற்கரிய பொக்கிஷம் ஆகிவிட்டது.



மொரிஷியஸ் வெளியிட்ட 35 கிராம் வெள்ளி 'காந்திஜி நாணயம்.'

மொரிஷியஸ் நாடு 2001-ல் 35 கிராம் எடை கொண்ட காந்திஜி வெள்ளி நாணயத்தை வெளியிட்டது. ஐந்தாயிரம் மட்டுமே வடிவமைக்கப்பட்டதால் இதுவும் இன்று விலை மதிப்பற்றதாகிவிட்டது.



தென் ஆப்பிரிக்கா வெளியிட்ட அதிக எடை கொண்ட காந்திஜி தங்க நாணயம்.

2008-ம் ஆண்டு தென் ஆப்பிரிக்கா காந்திஜியை கவுரவப்படுத்தும் விதத்தில் இரண்டு விதமான தங்க நாணயங்களையும், வெள்ளி நாணயத்தையும் வெளியிட்டது. தங்க நாணயம் 32 கிராம் எடைகொண்டது. இந்த நாணயம்தான் உலகிலே காந்திஜிக்காக வெளியிடப்பட்ட அதிக எடை கொண்ட தங்க நாணயமாகும். காந்திஜியை பெருமைப்படுத்த 7 உலக நாடுகள் தங்க நாணயங்கள் வெளியிட்டுள்ளன.



லைபீரியாவில் வெளியான காந்திஜி தங்க நாணயம்.

லைபீரியா 2001-ம் ஆண்டில் இந்த தங்க நாணயத்தை வெளியிட்டது. இதில் 2 ஆயிரம் மட்டுமே வடிவமைத்து வெளியிட்டார்கள். கூடவே வெள்ளி, நிக்கல் நாணயங்களும் தனித்தனியாக வெளியிடப்பட்டன.

– தொடரும்.



(இடம் பெற்றிருக்கும் அபூர்வ நாணயங்களும், தகவல்களும் சேகரித்தவர்: கும்மிடிப்பூண்டி எம்.எல்.ராஜேஷ்.)